# விலைமனு கோரல்
# விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
# இலங்கை நில அளவைத் திணைக்களம்
# SLCORSnet நாடு முழுவதும் நிறுவுதல் – 2025
# விலை மனு இலக்கம் – SD/IV/2025

1. நில அளவைத் திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய SLCORSnet நாடு முழுவதும் நிறுவுவதற்காக விலை மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை முன்வைப்பதற்காக விடுக்கப்படுகின்ற அழைப்பாகும்.
2. விலை மனுக்களைக் கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் செயன்முறைகளின் அடிப்படையில் ஒற்றைக் கட்ட இரட்டைக் கடித உறை விலை மனு கோரல் செயன்முறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.
3. அதற்காக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள், நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் விநியோகம்) இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதுடன், பின்வரும் முகவரியில் 2025.08.06 ஆம் திகதியில் இருந்து 2025.08.25 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரத்தில் விலைமனு கோரும் ஆவணங்களைப் பரிசீலிக்க முடியும்.
4. இருபத்தி ஐயாயிரம் ரூபாய் (ரூ. 25,000.00) பெறுமதியான மீள செலுத்தப்படாத தொகையில் 2025.08.25 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளின் அடிப்படையில் அலுவலக நேரத்தில் விலைமனு கோரும் முழுமையான ஆவணத் தொகுதியை பின்வரும் முகவரிக்கு வருகை தந்து விண்ணப்பப்படிவம் ஒன்றை சமர்ப்பித்த பின்னர் விலைமனுதாரர்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.
5. முன் விலைமனு ஒன்றுகூடல் 2025.08.14 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.
6. இரு பிரதிகளுடன் கூடியதாக தயாரிக்கப்பட்ட விலைமனு பத்திரத்தை உள்ளடக்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'SLCORSnet நாடு முழுவதும் நிறுவுதல் – 2025'** எனக் குறிப்பிட்டு விலைமனு உள்ளடங்கிய முத்திரையிடப்பட்ட கடித உறையை 2025.08.26 ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு கிடைக்கப் பெறுமாறு செய்தல் வேண்டும். தாமதமடைந்து கிடைக்கப் பெறுகின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2025.08.26 ஆம் திகதி மு.ப. 11.35 இற்கு பின்வரும் முகவரியில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலை மனுக்கள் திறக்கப்படும். சகல விலை மனுக்களும் விலை மனு காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. விலை மனு காப்பீட்டுப் பெறுமதி இருபது இலட்சம் ரூபாய் ஆகும். (2 மி. ரூ.)

**முகவரி –** சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் விநியோகம்), நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், இலக்கம் 150, கிருல வீதி, கொழும்பு 05. தொலைபேசி இலக்கம் / தொலைநகல் – 0112 368106

நில அளவையாளர் நாயகம்,

2025.08.04